Registered as a NewsPaper

விசைத்தீரா–07

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மார்ச் –17 | 30–03–2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை –041

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்

இல:–48A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
(சி-9261) 077-6059672

## சிறில.அரசவானொலி தொலைக்காட்சியை தேர்தல் ஆணையாளர் பொறுப்பேற்றார்

### காலம் தாழ்த்திய நடவடிக்கையென விமர்சனம்

சிறிலங்காவின் அரச வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்கள் பக்கச் சார்பாக செயற்படுகின்றன என்ற குற்றச்சாட்டின் பேரில் இவை இரண்டினையும் தேர்தல் ஆணையாளர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளார்.

அரசியல் சாசனத்தின் படி இந்த அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு உண்டு எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரச கட்டுப்பாட்டு ஊடகங்களான சிறிலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் தொலைக்காட்சி நிலையங்களைக் கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்னர் தனது கட்டுப் பாட்டின் கீழ் கொண்டுவந்திருந்தார். இதன் பின்னர் இந்த ஊடகங்கள் பக்கச் சார்பாகச் செயற்பட்டுவருகின்றன என பெருமளவினதான குற்றச் சாட்டுக்கள் எழுந்தமை தெரிந்ததே.

இது இவ்வாறிருக்க அண்மைக்காலத்தில் அரச ஊடகமான சிறிலங்கா ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் தலைவர் கட்சன் சமரசிங்க தேர்தல்

(8ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோதமாக கூடினர்; அம்பாறையில் 26பேர் கைது

சட்டவிரோதமாகக் கூடினார்கள் என்றபெயரில் அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனையில் 26பேர் நேற்று அதிகாலை பொலிசாரினால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

பொலிசாரினால் கைது செய்யப் பட்ட,இவர்கள் முஸ் லிம் அரசியல் கட்சி ஒன்றின் ஆதரவாளர்கள் எனவும், இவர்கள் கூடி இருந்த இடத்தில் பெற்றோல் நிரப்பப்பட்டுள்ள மின் குமிழ்கள், அதனைத்தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொருட்கள், கூரிய இரும்புக்கம்பிகள் சைக்கிள் செயின்கள் மற்றும் பொல்லுகள் போன்ற வன்முறைக்குப் பயன்படும் பொருட்களும் கைப் பற்றப்பட்டதாக அக்கரைப் பற்றுப்பொலிசார்கூறியுள்ள னர். இதேவேளை கைது செய்யப் பட்டவர்களில் ஐந்துபேர் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் வன்முறையுடன் தொடர்பு உள்ளவர்கள் எனவும் கைது

(8ஆம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பி. உறுப்பினரின் பாலியல் வல்லுறவு முயற்சியைக் கண்டித்து கரம்பனில் பேரணி

## பொதுமக்கள் பெருமளவில் பங்கேற்பு

**ஊர்காவற்துறை கரம்பன் சிறியபுஸ்பம் மகளிர் வித்தியாலய மாணவி ஒருவர் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவரால் பாலியல் வல்லுறவுக்கான துன்புறுத்தல் முயற்சிக்கு உள்ளாக் கப்பட்ட சம்பவத்தை கண்டித்து மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், பொதுமக்கள் கண்டன எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை நேற்று நடாத்தியுள்ளனர்.**

கடந்த 26ஆம் திகதி இடம் பெற்ற இச்சம்பவத்தைக் கண் டித்து பாடசாலையிலிருந்து ஊர் காவற்துறை பொலிஸ் நிலையம் வரை கண்டன எதிர்ப்புப் பேரணி யொன்றை நேற்றுக் காலை அவர்கள் நடாத்தியிருந்தனர்.

சிறிய புஸ்பம் மகளிர் கல்லூரி அதிபர் தலைமையில் இடம் பெற்ற இந்த கண்டனப் பேரணியில்ஐந்து பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் கலந்து கொண்டனர்.

பேரணியின் முடிவில் போர் நிறுத்த கண்காணிப்புக்குழு, மனிதஉரிமைகள் ஆணைக்குழு, ஊர்காவற்துறை பிரதேசசெயலர் ஆகியோருக்கு பேரணியில் கலந்து கொண்ட மாணவர்களால் மகஜர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அருட்சகோதரி எலிசபேத் அந்தோனிப்பிள்ளையின் தலைமையில் சுருவில் வீதியால் ஊர்காவற்துறையை நோக்கி வந்த பேரணி முதலில் ஊர்காவற் துறையிலுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் அலுவலகத்துக்குச் சென்று அங்கு பிரதேசப் பொறுப்பாளர் ரதனிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. பின்னர் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற பேரணி அங்கு பொலிஸ் அதிகாரியிடமும் தொடர்ந்து பிரதேச செயலகம் நோக்கிச் சென்ற பேரணி அங்கு வைத்துசிறுவர்பாதுகாப்பு அமைப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஆனந்த சங்கரியின் பிரச்சாரத்தில் தென்னிலங்கை காடையர் குழு

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கென தென்னிலங்கையில் இருந்து கூலியாட்களை யாழ். குடாநாட்டிற்கு அழைத்து வந்து பிரச்சார நடவடிக்கைகளில் ஆனந்தசங்கரி குழுவினர் ஈடுபடுத்தி வருவதாக குற்றச்சாட்டப்படுகிறது.

இத்தேர்தலில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இவர்களின் ஆதரவாளர்கள் பலரும், எந்தவொருபிரச்சார நடவடிக்கையிலும் ஈடுபடாது விலகியிருந்து வருகின்றனர். வீ. ஆனந்தசங்கரி தலைமையிலான சுயேட்சைக்குழுவினர் மீது பல இடங்களில் இடம்பெற்று வரும் எதிர்ப்புகளையடுத்தே, ஆதரவாளர்கள் எவரும் சொல்லிக்கொள்ளத்தக்க அளவில் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையிலேயே ஆதரவாளர்கள் எவருமற்றிருப்பதால் கூலிக்கென தென்னிலங்கையில்

(8ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி மக்கள் வாக்களிப்பதைத் தடுக்க முயலவில்லை

### -ஜோசப்பரராஜசிங்கம் தெரிவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்திற்கு உட் பட்ட மக்களை வாக்களிக்க விடாமல் தடுப்பதற்கு தான் சதிசெய்ததாக வெளியாகிய செய் தியை தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் முதன்மை வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கம் மறுத்துள் ளார்.

மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வேட்பாளரும், முன்னாள் பிரதியமைச்சருமான கிஸ்புல்லாவுடன் இணைந்து புலிகளின் கட்டுப்பாட்டு பகுதி மக்களை வாக்களிக்கவிடாமல் தடுப்பதற்கான

(8ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவின் பிரசுரத்தை வாங்க மறுத்தவர் அடித்து கைகள் முறிக்கப்பட்டார்

### மட்டு.களுவாஞ்சிக்குடியில் சம்பவம்

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிக்குடியில் கருணாவின் கும்பலின் தாக்குதலுக்கு இலக்காகி சுந்தரலிங்கம் என்பவர் கைகள் முறிந்தநிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கருணா குழுவின் துண்டுப்பிரசுரமொன்றை வாங்கமறுத்ததற்கே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்தகாலங்களில் சிறிலங்காவின் சித்திரவதைக்கூடங்களான வெலிக்கடை மற்றும் பூசாசிறைகளில் பலவருடங்களாகத் தடுத்துவைக்கப்பட்டு கொடூர சித்திரவதைகளை அனுபவித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்க் கூட்டமைப்புக்கு ஆதரவாக தம்பலகாமத்தின் எழுச்சிப் பேரவை

(திருகோணமலை)

தம்பலகாமம் கிராம தமிழ் மக்கள் நேற்றுமுன்தினம் பிற்பகல் பல கிலோமீற்றர் தூரஎழுச்சிப் பேரணி ஒன்றை நடத்தினர். பேரணிநிறைவில் தம்பலகாமம் கோயிலடிமைதானத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் பிரச்சாரக்கூட்டம் நடத்தப்பட்டது.

எழுச்சிப்பேரணி தம்பலகாமம், புதுக்குடியிருப்புபகுதி நாலு வாசல் பிள்ளையார் ஆலய சந்தியில் இருந்து ஆரம்பமானது. நூற்றுக் கணக்கான சைக்கிள்கள், மோட்டர் சைக்கிள்கள், இரண்டுசக்கர, நான்கு சக்கர உழவு இயந்திரங்கள் பெட்டிகள்ஆகிய வற்றில் ஆண்கள், பெண்கள், இளைஞர், யுவதிகள்,சிறுவர்கள் ஒவ்வொருவரும் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களின் படங்களை ஏந்தியபடி பேரணியில் பங்குபற்றினர். மஞ்சல், சிவப்புக்கொடிகள் வாகனங்களில் பறக்க விடப்பட்டிருந்தன. எழுச்சிப்பேரணி, கூட்டாம்புளி மற்றும் பலஇடங்கள் ஊடாக நாயன் மார்திடலை வந்தடைந்து.

(8ஆம் பக்கம் பார்க்க)

## அமைதியான முறையில் தேர்தலே எமது தலைமையின் எதிர்பார்ப்பு

### -யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

அமைதியான முறையில் எதிர்வரும் பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது தலைமையின் எதிர்பார்ப்பு இவ் எதிர்பார்ப்பின்படி மக்களின் சனநாயக உரிமைகளை மதித்து நாம் இற்றைவரை செயற்பட்டு வருகிறோம். என யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

நேற்று மாலை யாழ். மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேர்தல் காலத்தில் வன்முறைகளும், இடையூறுகளும் அற்றவிதத்தில் வாக்கெடுப்புகள் இடம் பெறவேண்டும் என்பதற்காகநாம் ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருகின்ற போதும் எமக்கும் தமிழ் மக்களுக்கும் சர்வதேச மட்டத்தில் களங்கத்தை ஏற்படுத்த வீ.ஆனந்தசங்கரி, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர்.

ஆயுதங்கள் அனைத்தும் களையப்பட்ட நிலையிலுள்ள புலிகளும், மக்களும்தம்மை அச்சுறுத்துவதாக குற்றம் சாட்டி அப்பட்டமாக பொய்ப் பிரச்சாரங்களை செய்து வருவதை நாம் முற்றாக நிராகரிப்பதுடன் இச்செயல்களுக்கு கடும் கண்டனத்தையும் தெரிவிக்கின்றோம். சனநாயக நடைமுறைகளைப் பேணும்

(8ஆம் பக்கம் பார்க்க)

# முக்கிய அறிவித்தல்

**பரமேஸ்வரா நம்பிக்கை நிதிய தானியலட்சுமி கமப்பயிர்ச் செய்கையாளர்களுக்கான அறிவித்தல்.**

மேற்படி கமத்தில் பயிர்ச்செய்கையினை மேற் கொள்பவர்கள் 10.04.2004க்கு முன்பாக கடந்த காலபோக வேளாண்மைக்குரிய குத்தகைப்பணத்தினை செலுத்தி அதற்குரிய பற்றுச் சீட்டினை பெற்றுக் கொள்ளும்படியும் இக் குத்தகையினை செலுத்தாது பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு 2004ம் ஆண்டு சிறுபோக வேளாண்மை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதனையும் தெரியப்படுத்திக் கொள்வதுடன் இக்குத்தகை அறவீட்டாளராக திரு. இ. ரவீந்திரன் நியமிக்கப் பட்டுள்ளார். என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொன்.நித்தியானந்தம்
பிரதேசசெயலர்,
கரைச்சி, கிளிநொச்சி.

(9433)

# ஓராண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
14
02
1932



ஆண்டவன் அடியில்
10
04
2003

அமரர்

## அருணன் மினாசி

*அன்பின் உருவே! எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே*
*பொன்போல எமைக்காத்த குலவிளக்கே*
*கணப்பொழுதில் எம்மைக் கலங்க வைத்துவிட்டு*
*காலனுடன் சென்று ஓராண்டு ஆனாலும்*
*தினந்தோறும் உங்கள் நினைவால் வாடுகிறோம்*

*30.03.2004 அன்று எமது இல்லத்தில் ஆண்டு கிரியை நடைபெற உள்ளதால் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

தகவல்: கோபாலரட்ணம் குடும்பம்,
மனைவி,பிள்ளைகள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்.

மாறாயிலுப்பை
நெடுங்கேணி.

(4406)

# வரிவிளம்பரம்

## கணினி பயிற்சி

பாடசாலை மாணவர்களின் விடுமுறையைப் பயனுள்ள முறையில் கழிக்க விசேட கணினி பயிற்சி நெறி. 40 நாட்கள் மட்டுமே. கட்டணம் 750/= மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள். ஆரம்பம்:- 03.04.2004 காலை 9.00 மணி. தொடர்புகளுக்கு:- DB TECH 155ம் கட்டை,கிளிநொச்சி.

(4407)

## புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

**ஜோண் கல்விநிலையம்**

முல்லை வீதி புதுக்குடியிருப்பு 2006 ஆம் ஆண்டிற்கான A/L கலை வகுப்புக்களும், O/L மீட்டல் வகுப்புக்களும், A/L விசேட ஆங்கில வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

காலம்:- 05.04.2004 திங்கள் பி.ப.3.00 மணி. நிர்வாகி. (4063)

# கவி கல்வி நிலையம்-நீராவிப்பிட்டி

எமது கல்வி நிலையத்தில் கல்வி கற்று 2003 ம் ஆண்டு O/L பரீட்சையில் சிறந்த தேர்ச்சிபெற்ற மாணவர்களையும், அவர்களுக்கு கல்விபுகட்டிய ஆசிரியர்களையும் வாழ்த்துகிறோம்.

| மாணவர்கள் | பெறுபேறுகள் |
|---|---|
| 01.கு.சாமந்தி | 09A,B |
| 02.த.அம்புஜா | 07A,03B |
| 03.எ.பௌசிகா | 07A,02B,C |
| 04.செ.சியாமளாகௌரி | 07A,02B,C |
| 05.கி.சரண்ஜா | 06A, 02B,02C |
| 06.சி.கிருஷாந்தி | 05A,04B,C |
| 07.அ.யோகடெறினா | 05A,02B,02C,S |
| 08.அ.பவிதா | 02A,03B, 04C |
| 09.ம.செந்தூரன் | 02A,02B,03C,03S |
| 10.தி.ராகவன் | 02A,B,02C,03S |
| 11.சி.நிஷாந்தி | 02A,04B,02C |

கணிதபாடம் மட்டும் கற்றோர்

க.சஞ்சீவன் - A கா.சுதர்சினி -B
தி.நிந்துயா -B ச.சிந்துஜா -B

ஆசிரியர்கள் விபரம்

திரு.C.S.பரமேஸ்வரன் -கணிதம்/சமூகக்கல்வி
திரு.R.றெஜினோல்ட் -விஞ்ஞானம்
திரு.K.T.சுந்தரேசன் -விஞ்ஞானம்
திருமதி. ஸ்ரீ.சூரியகலா -தமிழ்
திருமதி- வே.ருத்ரா - வர்த்தகம்
திரு- T.சிற்சபேசன் -விவசாயம்

கணிதத்தில் A சித்தி பெற்றோர் -06பேர்
கணிதத்தில் B சித்தி பெற்றோர் -05பேர்

"பொன்னின் குடத்திற்கு பொட்டிட வேண்டுமா"

C.S.கவி
நிர்வாகி.

(4357)

கிளி நகரில்...



## மணி ஐயப்பா நகை அடைவு பிடிக்கும் இடம்

**169,ஸ்கந்தபுரம் எனும் முகவரியில் இயங்கியது.**

வாடிக்கையாளர்களின் நன்மைகருதி யாழ்சாலை, கிளிநொச்சியில் அமைந்துள்ள மணி ஐயப்பா நகைமாடத்தில் இயங்குகிறது என்பதையும் இக்கடையில் அடைவு வைத்தவர்கள் எதிர்வரும் புதுவருடப்பிறப்பிற்கு முன்னர் (13-04-2004) அடைவு எடுப்பவர்களுக்கு வட்டியில் விசேட கழிவு வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.


நங்கையர் விரும்பும் நவீன டிசைன் நகைகளை
அசல் 22 கரட்டில் அழகாக வடிவமைத்து
உங்களுக்கு தருபவர்கள்

## மணி ஐயப்பா நகைமாடம்

யாழ்சாலை, கிளிநொச்சி
(ஈழநாதம் பணிமனை முன்பாக)

நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்







உ
சிவமயம்

"நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்குக"

கரைச்சி

## புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயஉற்சவப் பொங்கல்

(04-04-2004)

# தண்டல் ஒழுங்கிற்கான அறிவித்தல்

மேற்படி பொங்கல் விழாவைமுன்னிட்டு 30.03.2004 தொடக்கம் வட்டக்கச்சி, இராமநாதபுரம்,கல்மடு,விசுவமடு,புன்னை நீராவி,பிரமந்தனாறு, தொட்டியடி, உடையார்கட்டு,தேவிபுரம், சுதந்திரபுரம் ஆகிய பகுதிகளுக்கு ஆலய சின்னம் பொறிக்கப்பட்ட கொடிகள்,பற்றுச்சீட்டுக்களுடன் உழவு இயந்திரங்களில் வருகை தரவுள்ளதால் மக்கள் தங்கள் நேர்த்திப்பொருட்களை வழங்கி பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

(சி.9431)

ஆலய பரிபாலனசபை

# பிரான்சில் இடதுசாரிகள் வெற்றி சனாதிபதி ஜக்சிராக்கிற்கு நெருக்கடி

**பிரான்ஸ் சனாதிபதி ஜக்சிராக் பிரதமரை நீக்கும் அளவிற்கு அமைச்சரவையில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளார்.**


இங்கு இடம்பெற்ற பிராந்திய தேர்தல்களில் இடதுசாரிகள் பாரிய வெற்றியைப் பெற்றுள்ளனர். இதனைத் தொடர்ந்து சனாதிபதி தனது அமைச்சரவையை மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நேற்று முன்தினம் வெளியான தேர்தல் முடிவுகளில் பழமைவாதக் கட்சிகள் ஆட்சி செய்த பல பகுதிகள் இடதுசாரி எதிர்க்கட்சியினருக்கு கிடைத்துள்ளது. அந்நாட்டின் அரசாங்கம் வாழ்க்கைச் செலவைக் குறைக்க தவறியுள்ளமையே இவ் வெற்றிக்கு முக்கிய காரணியாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேர்தல் முடிவுகள் எதுவாயிருந்தாலும் பொருளாதார சீர்திருத்தங்கள் தொடருமென சனாதிபதி ஜக்சிராக் கூறியுள்ளார். அரசியல் ரீதியாக இச்சீர்திருத்தங்கள் எனக்கு தோல்வியைத் தந்தாலும் சீர்திருத்தங்களின் அவசியம் கருதி அவை தொடர்ந்தும் செயற்படுத்தப்படுமெனத் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையில் சனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 12 பேர் விடுவிப்பு

அல்ஹைறதாவுடன் தொடர்புடைய தீவிரவாதிகள் கடத்திவைத்திருந்த 12 பாகிஸ்தான் அரச அதிகாரிகள் மற்றும் இராணுவவீரர்களை நேற்று முன்தினம் விடு தலை செய்துள்ளனர் இதற்கு பதிலாக இஸ்லாமிய தீவிரவாதி களுக்கு பாதுகாப்பளிக்கும் மண்சுவர் கோட்டையை சுற்றி வளைத் துள்ள படையினரை விலக்கிக் கொள்ள பாகிஸ்தான் இணங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஈராக்கில் கிளர்ச்சியாளரால் தாக்குதல் நடத்தப் பயன்படுத்தப்பட்ட ஏவுகணையொன்றின் இலத்திரனியல்பாகமொன்றைப் பரிசீலிக்கும் பொலிசார்.

# சர்வதேச அணுஆயுத விற்பனையில் முஷாரப்பிற்கு தொடர்பு இல்லை

## -அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர்

சர்வதேச அணுவாயுதம் விற்பனை தொடர்பான விவகாரத்தில் பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்பிற்கு எவ்வித தொடர்பும் இல்லையென அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அணுவாயுதம் விற்பனை தொடர்பாக முஷாரப்பை குற்றவாளியாக கருதுவதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லையென அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை பாகிஸ்தானின் முன்னணி அரசியல் தலைவர்களின் ஆதரவுடன் அணுவா யுத தொழில்நுட்பங்களை முஷாரப் விற்பனை செய்ததாக பாகிஸ்தானின் அணுத் தந்தையெனக் கூறப்படுகின்ற அப்துல் கதீர்கான் கூறியிருந்தார். இது தொடர்பாக ஆராய்ந்த வெள்ளை மாளி கையின் விசேட புலனாய்வுக்குழு முஷாரப்பிற்கு இவ் விற்பனையுடன் எவ்வித தொடர்பும் இல்லையென சுட்டிக்காட்டியுள்ளது.

# புதிய சட்டதிருத்தம் குறித்து அத்வா[illegible]ியை வைகோ சாடல்

(சென்னை)

பொடோ சட்டத்தின் கீழ் தண்டனை பெற்றவர்கள் ஆறு ஆண்டு காலத்திற்குத் தேர்தலில் பங்கு பற்றுவதைத் தடுக்கும் வகையில் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு துணைப்பிரதமர் அத்வானியே காரணம் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை மதிமுக பொதுச்செயலர் வைகோ திருச்சியில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

பொடோ சட்டத்தின் கீழ் ஒரே ஒருநாள் மட்டும் தண்டனை பெற்றால்கூட ஆறு ஆண்டுகளுக்கு தேர்தலில் பங்குபற்ற முடியாது எனும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டதிருத்தத்தைச் சுட்டிக் காட்டிய அவர், பிரதமர் வாஜ்பாயிக்குக் கூட தெரியாமலேயே இந்தச் சட்டதிருத்தத்தை அத்வானி கொண்டுவந்தார் என்று குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை தமிழக மக்களுக்காக வைகோ குரல் கொடுப்பதில்லை எனும் அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதாவின் குற்றச்சாட்டை மறுத்த வைகோ,

கடமைகளை நிறைவேற்ற தாம் தவறியதில்லை என்று கூறிய அவர் தமிழக நலனுக்காக மத்தியரசிடம் வலியுறுத்தி வந்துள்ளதாகக் கூறியுள்ளார்.



நேற்று முன்திவம் மோசூலில் தாக்குதலுக்கு இலக்கான ஈராக்கிய பொது வேலைகளுக்குப் பொறுப்பான வெளியுறவு அமைச்சரின் வாகனத்தைச் சூழ்ந்திருக்கும் உள்ளூர் வாசிகள்.

# முத்தரப்பு பேச்சுக்கள் மூலமே காஷ்மீர் [illegible]ரச்சினைக்குத் தீர்வு

## பாக். மக்கள்கட்சி தெரிவிப்பு

முத்தரப்பு பேச்சுவார்த்தையை நடத்துவதன் மூலமே காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாணலாமென பாகிஸ்தான் மக்கள் கட்சி தெரிவித்துள்ளது.இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக் குமிடையே நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் காஷ்மீரும் கலந்து கொள்ள வேண்டுமென அக்கட்சி மேலும் வலியுறுத் தியுள்ளது.

# ஒலியிலும் ஏழு மடங்கு வேகத்தில் பறக்கும் விமானம் பரீட்சிப்பு

(வாஷிங்டன்)

ஒலியிலும் பார்க்க 7மடங்கு வேகத்தில் செல்லக்கூடிய ஜெட் விமானம் ஒன்றை நாஸா விஞ்ஞானிகள் கடந்த சனிக் கிழமை பரீட்சித்து வெற்றியடைந்துள்ளார்கள்.

இந்தப் பரீட்சிப்பிற்குப் பொறுப்பாகவுள்ள லோரன்ஸ் கருத்துக் கூறுகையில்,

சகலவிதமான சாதனைகளையும் முறியடித்த தனித்துவமான பெறுபேறு இதுவாகும் என்று கூறியுள்ளார்.

12அடி நீளமான இந்த ஜெட் விமானம் மணித்தியாலம் ஒன்றிற்கு 8ஆயிரம் கிலோமீற்றர் வேகத்தில் பறந்துள்ளது. 11விநாடிகள் 15மைல்கள் இந்த ஜெட் விமானம் கடந்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

பசுபிக் சமுத்திரத்துக்கு மேலாக கலிபோர்னியாவின் தெற்குக் கரையோரமாக இந்தப்பரி சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பல விநாடிகளுக்கு ஒலியிலும் பார்க்க 7மடங்கு வேகத்தில் இந்த விமானம் சென்ற பின்னர் பசுபிக் சமுத்திரத்தினுள் வீழ்ந்து மூழ்கியுள்ளது. இதனை மீட்டெடுப்பது தொடர்பான செலவுகள் மிகவும் அதிகம் என்பதால் அதனை மீட்டெடுப்பது பற்றிய எண்ணம் கைவிடப்பட்டுள்ளது என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளார்கள்.

ஜெட் விமானங்கள் தமக்குத் தேவையான பிராணவாயுவையும் எரிபொருளையும் கொண்டுசெல்வது வழக்கமாகும்.

ஆனால் நேற்று முன்தினம் பரீட்சிக்கப்பட்ட ஜெட்விமானம் எரிபொருளை மட்டுமே கொண்டு சென்றுள்ளது.இதேவேளை இந்த ஜெட் விமானம் தொடர்பான முதலாவது பரிசோதனை 2001யூன் மாதம் மேற்கொள்ளப்பட்ட போதும் இயந்திரக்கோளாறு காரணமாக அது தோல்வியடைந்துள்ளது.

எனினும் ஒலியிலும் பார்க்க 10மடங்கு வேகமான அதாவது மணித்தியாலம் ஒன்றிற்கு 11ஆயிரம் கிலோ மீற்றர் செல்லக்கூடிய ஜெட் விமானம் ஒன்றை செலுத்தி பரீட்சிற்கும் நடவடிக்கையை இந்த ஆண்டு இறுதியில் நாஸா மேற்கொள்ளவுள்ளது.

## -நாட்டுக்குள் பிரவேசித்தால் கொல்லப்படுவீர்-

# கெயிட்டி முன்னாள் சனாதிபதிக்கு கிளர்ச்சி வாதிகளின் தலைவர் எச்சரிக்கை

கெயிட்டியின் முன்னாள் சனாதிபதி அரிஸ்டைட் மீண்டும் நாட்டிற்குள் பிரவேசித்தால் அவர் கொல்லப்படுவாரென கெயிட் டியின் கிளர்ச்சிவாதிகளின் தலைவர் சூளுரைத்துள்ளார்.

1980 ஆம் ஆண்டு தனது மனைவியைத் கொலை செய்தது போல் அரிஸ்டைட்டையும் கொலை செய்யத் தான் காத்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். அத்துடன் தன்னிடம் 15 ஆயிரம் தொடக்கம் 20 ஆயிரம் வரையிலான ஆயுதம் தாங்கிய கெயிட்டியர்கள் இருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை தீவிரவாதத்திற்கு எதிராக செயற்படுவதாகக் கூறி அமெரிக்காவிற்கு ஆதரவாகவும் ஏனைய நாடுகளின் தீவிரவாதத்திற்கு ஆதரவளித்தமைக்காகவும். கெயிட்டியின் மக்கள் அவருக்கு தகுந்த தண்டனையை அளிப்பார்களெனவும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கெயிட்டியின் முன்னாள் சனாதிபதி அரிஸ்டைட் நாட்டை விட்டு ஓடியமை தெரிந்ததே.



12 பில்லியன் டொலர் செலவில் ஒருவருடமாக நிர்மாணிக்கப்பட்ட தென்கொரியாவின் முதலாவது அதிவேக புகைவண்டி, சேவையில் ஈடுபடுகிறது.

# சைப்பிரஸ் குறித்து இணக்கத்தை ஏற்படுத்த கொபி அனான் முயற்சி

சைபிரஸின் அரசியல் எதிர்காலம் குறித்து நடைபெறுகின்ற பேச்சுவார்த்தைகளுக்கு மேலும் வலுவூட்டும் வகையில் ஐ.நா.சபை செயலர் கொபி அனான் சுவிஸ்லாந்துக்கான விஜயமொன்றைத் தொடங்கியுள்ளார்.

எதிர்வரும் மே மாதம் ஐரோப்பிய ஒன்றியத்துடன் சைபிரஸ் இணைவதற்கு ஏற்றவகையிலேயே இரு துண்டாகப் பிரிந்துள்ள அதன் உண்மை நிலையை விளக்க வேண்டுமென்று துருக்கிய மற்றும் கிரேக்க சைபிரசுடனும் அதன் ஆதரவான அரசாங்கத்துடனும் பேசி அவர்களை இணங்கவைக்க கொபி அனான் முயற்சிகளை மேற்கொள்வார் என்று ஐ.நா. செயலகம் கூறியுள்ளது.

இதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைகின்ற ஒன்றுபட்ட சைப்பிரஸில் மக்கள் சுதந்திரமாக நடமாடுகின்ற உரிமைகள் தடுக்கப்படவேண்டும் என்று துருக்கி கூறியுள்ளது. இதற்குக் காரணம் 1974ஆம் ஆண்டு துருக்கியப் படைகள் சைபிரஸின் வடபிராந்தியத்தில் மேற்கொண்டபடையெடுப்பிற்குப் பின்னர் அப்பகுதிகளில் அமைந்திருந்த கிரேக்க சைப்பிரஸ் காரர்களுடைய வீடுகளை அவர்கள் மீண்டும் திருப்பித் தருமாறு கேட்கக்கூடும் என்று துருக்கி கருதுகின்றது.

அதேவேளை சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கிரேக்க சைபிரஸ் பகுதி மட்டும் ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்க்கப்படும் நிலை உருவாகும்பட்சத்தில் சைப்ரஸ் இரு பகுதிகளாகவே இருக்கும் நிலைமை மேலும் தொடரும் என்றும் கருதப்படுகின்றது.




# முக்கியத்துவம் பெற்றுள்ள இந்திய-பாகிஸ்தான் கிரிக்கெட் தொடர்

சுமார் இருவருடங்களில் அதாவது 2002ம் ஆண்டு இங்கிலாந்துமண் ணில் இங்கிலாந்து அணியை அதன்மண்ணில் இறுதிப் போட்டியில் வென்று கிண்ணத்தை சுவீகரித்த பின்னர் இந்தியகிரிக்கெட் அணி பல போட்டிகளில் பங்குபற்றி ஏமாந்து தற்போது ஒரு போட்டித் தொடரை வென்றுள்ளது.

இங்கிலாந்து மண்ணில் அவ்வணியுடன் 'நட் வெஸ்ட்' கிண்ணத்துக்கான இறுதிப் போட்டியில் வெறும் 135 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையிழந்து பரிதாபகரமான நிலையில் இருந்த வேளையில் முகமது கைப், யுவராஜ்சிங் ஆகியோர் கைகொடுக்க வெற்றியிலக்கான 326 ஓட்டங்களைப் பெற்றுகிண்ணத்தை வென்று திரும்பியது. அவ்வாண்டு கொழும்பில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மழை குறுக்கிட சிறிலங்காவுடன் கிண்ணத்தைப் பகிர்ந்து கொள்ளும்நிலை இந்தியாவுக்கு ஏற்பட்டது.

சென்ற வருடம் தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற உலகக் கிண்ண போட்டிகளி

**வடிவேல்**

லும் இறுதிப் போட்டியிவரை முன்னேறி இறுதியில் சம்பியன் கனவை இழந்தது. அதனைத் தொடர்ந்து தனது மண்ணில் நடைபெற்ற T.V.S கிண்ண முக்கோண போட்டியிலும் இறுதிவரைக்கும் வந்து அதே அணியிடம் (அவுஸ்திரேலியா) மண் கவ்வியது.

எனினும் கடந்த நவம்பரில் அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு அம்மண்ணிலேயே அவுஸ்திரேலியாவுக்கு பெரும் சவால் விட்டு பல சாதனைகளைப் படைத்து டெஸ்ட் போட்டியை சம நிலைக்கு கொண்டு வந்தது-அத்துடன் சிம்பாப்வேயும் பங்கு கொண்ட முக்கோண ஒரு நாள் போட்டிகளில் கலந்து கொண்டு அதிலும் இறுதிப் போட்டிவரை முன்னேறியது. இத்தொடர்கள் இரண்டிலும் இந்திய வீரர்கள் குறிப்பிடத்தக்க வகையில்களமாடியதை மறக்க முடியாது குறிப்பாக லக்ஸ்மனின் பங்கு.

அதே லக்ஸ்மனின் பங்களிப்பின் காரணமாக அண்மையில் பாகிஸ்தானில் அவ்வணியுடனான வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு நாள் போட்டித் தொடரைக் கைப்பற்றி இந்திய அணி தமது மண்ணுக்கு பெரும் புகழை ஈட்டித் தந்துள்ளதுடன் உலக கிரிக்கெட் அரங்கில் ஒருபடி மேலோங்கி நிற்கின்றது.



பாகிஸ்தானுடனான இப்போட்டித் தொடர் இந்திய அணிக்கு ஒரு சவாலாகவே காணப்பட்டது என்றால் அதில் தவறேதும் இருக்கமுடியாது. காரணம் கடந்த உலகக்கிண்ணப் போட்டிகள் இரண்டிலும் அது பாகிஸ்தானை வென்றதால் பாகி ஸ் தான் தனது கணக்கை முடிக்க தருணம் பார்த்து இருந்த தெனக் கருதலாம். அன்றியும் இரு நாடுகளுக்கும் இது ஒரு கௌரவப் பிரச் சினையாகவும் இருந்திருக்கலாம்.

இந்தியாவுடனான இப்போட்டித் தொடரில் பாகிஸ்தானின் ஆட்டத்தையும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. காரணம் கடந்த 13 ம் திகதி கராச்சியில் நடைபெற்ற முதலா வது போட்டியில் இந்தியா நிர்ணயித்திருந்த 350 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை அது வெறும் 5 ஓட்டங்கள் என்ற சிறு வித்தியாசத்திலேயே இழந்தது. அத்துடன் அடுத்து நடைபெற்ற இரு போட் டிகளிலும் தொடர்ந்து இந்திய அணியை மண் கவ்வச் செய்தது பாகிஸ்தான் அணி.

அச்சந்தர்ப்பத்தில் இந்தியாவின் ஒரு நாள் போட்டித் தொடரைக் கைப்பற்றும் கனவு கேள்விக்குறியானது. அப்போதெல்லாம் இந்திய பந்து வீச்சாளர்கள் பற்றியும் துடுப்பாட்ட வீரர்கள் பற்றியும் குறிப்பாக ஆஸி.மண்ணில் தொடர் சதங்களைக்குவித்த லக்ஸ்மன் பற்றியும் ரசிகர்கள் சிந்திக்கத் தொடங்கியிருக்கலாம்.

ஆயினும் எதிர்பாராத விதமாக பாகிஸ்தான் வீரர்களின் கனவுகளையெல்லாம் சிதறடித்து அடுத்து வந்த இரு போட்டிகளிலும் இந்திய வீரர்கள் திறமை யுடன் பிரகாசித்து ஒரு நாள் தொடரைக் கைப்பற்றியுள்ளனர். இதில் இளம்புயல் கைப்பினதும் ட்ராவிட்டினதும் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

போட்டிகளில் தோல்வியேற்படும் போது தமது தரப்பில் திறமையான பந்து வீச்சாளர்கள் இல்லை என புலம்பும் கங்குலியின் புலம்பலை இளம் பந்துவீச்சாளர்களான இர்பான் பதான்,பாலாஜி ஆகியோர் நிறுத்தியுள்ளனர். அவர்களிருவரும் பந்து வீச்சில் மட்டுமன்றி துடுப்பாட்டத்திலும் தம்மைத் திறமைசாலிகள் என்பதை நிரூபித்துள்ளனர். அத்துடன் பாகிஸ்தானுடனான 4 ஒரு நாள் போட்டிகளிலும் மொத்தமாக சுமார் வெறும் 40 ஓட்டங்களை மட்டும் பெற்ற வி.வி. எஸ் லக்ஸ்மன் 5வதும் இறுதியுமான போட்டியில் சதமடித்து மீண்டும் தன்னை ஒரு சிறந்த துப்பாட்ட வீரர் என்பதை நிரூபித்துள்ளார்.

உலகில் தலைசிறந்த பந்துவீச்சாளர்களில் ஒருவரான பாகிஸ்தான் வீரர் சொகைப் அக்தர்மற்றும் மொகமட்சமி அப்துல் ராசக் ஆகியோர் இந்தியாவின் வெற்றியைத் தவிர்க்க முடியாமல் போனமை வியப்பாகவே தோன்றுகிறது. அத்துடன் சஹிர்கான், பதான், பாலாஜி ஆகியோரின் பந்து வீச்சுக்களை சமாளித்து ஓட்டங்களைக் குவித்து வெற்றியை தம்வசம் இழுக்க நிதானமாகவும் அத்துடன் வேகமாகவும் ஆடிய பாகிஸ்தானிய துடுப்பாட்ட வீரர்களான மொயின்கான்,சலிம் மலிக் ஆகியோரையும் குறைத்து மதிப்பிடமுடியாது.

மொத்தத்தில் இரு அணிகளுக்குமிடையிலான 5 ஒரு நாள் போட்டிகளும் பரபரப்பாகவும் அதேவேளை இறுதிவரை வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க முடியாத போட்டிகளாகவும்இருந்தன என்பதில் தவறொன்றுமில்லை.அன்றியும் இரு அணிகளினதும் இளம் வீரர்களினதும் பங்களிப்பே போட்டிகளை விறுவிறுப் பூட்டுவனவாக அமைந்தன.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஆரம்பமான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி முதல் நாளே வலுவான ஓட்டத்தைப் பெற்ற நிலையில், போட்டித் தொடர் உனக்கா, எனக்கா என்ற நிலையில் முடிவடையும் என்பதில் ஐயமில்லை.

---

# வரலாற்றுத் தோல்வி

சிறிலங்கா கிரிக்கெட் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை முழுமையாகக் கைப்பற்றியதன்மூலம் உலகில் அசைக்க முடியாத அணி தாங்கள் என்பதை அவுஸ்திரேலியா மீண்டும் நிரூபித்துள்ளது.

தமது சொந்த மண்ணிலும் அண்டை நாடுகளிலும் பல தொடர் வெற்றிகளைக் குவித்து வீழ்த்த முடியாத அணியாக வலம் வந்த அவுஸ்திரேலிய அணி தனது சொந்த மண்ணில் இந்தியாவுடனான டெஸ்ட் தொடரைக் கைப்பற்ற முடியாது போனமை சிறிலங்காவுக்கான சுற்றுலாவை முக்கியத்துவப்படுத்தியிருந்தது.

குறிப்பாக போட்டித்தொடரில் அவுஸ்திரேலிய அணி கடும் சவாலை எதிர்கொள்வதுடன் போட்டிகளில் வெற்றிபெறுவதற்குக் கடுமையாக போராட வேண்டிவரும் எனவும் எதிர்வு கூறப்பட்டது.

இந்நிலையில் எந்தப் போட்டியையும் சவாலாக ஏற்று விளையாட்டை உரியமுறையில் ஆடுவதில் கைதேர்ந்தவர்களான அவுஸ்திரேலியர் சில போட்டிகளில் நெருக்கடியைச் சந்தித்த போதும் அதனை வெற்றிக் கம்பத்துக்கு நகர்த்திச் சென்றவிதம் மேற்படி எதிர்வு கூறல்களை பொய்யாக்கியது.

எதிரியின் ஒவ்வொரு பந்து வீச்சையும் நன்கு கணித்து விளையாடும் திறமைகொண்ட அவுஸ்திரேலியர் பந்துவீசும் போது துடுப்பாட்ட வீரரின் பலவீனத்தைக் கண்டறிந்து பந்து வீசுவதில் வல்லவர்களாக உள்ளனர் என்பதையும் நிரூபித்தனர். இச்செயற்பாடுகள் எந்த அணிக்குமே இல்லாத திறமையாகவே பார்க்கப்படுகின்றது.

ஏனெனில் எதிரணியின் வெற்றிபெறும் இலக்கு பெரியதாக இருக்கின்ற போதும்சரி எதிரணி அதிகரித்த ஓட்டங்களைப் பெற்றுச் செல்கின்ற போதும் சரி அதனைக் கட்டுப்படுத்துவதற்கு அவர்கள் கையாளும் வியூக அமைப்பு அவர்களுக்கு அதிகளவில் வெற்றிக்கான அனுகூலங்களை பெற்றுக்கொடுக்கின்றது. அந்தளவுக்கு ஒவ்வொரு வீரரினதும் பலம் பலவீனத்தை நன்கு கண்டறிந்து செயற்படுகின்றனர். இதில் அணித் தலைவர் முக்கியத்துவம் பெறுகின்றார்.

முன்னாள் டெஸ்ட் அணித்தலைவர் ஸ்ரீவ்வோ அண்மையில் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து டெஸ்ட் போட்டிக்கும் தலைமைதாங்கும் ரிக்கிபொண்டிங் தான்வழிநடத்திய முதலாவது டெஸ்ட் தொடரை முழுமையாக அந்நிய மண்ணில் கைப்பற்றி தான் ஒரு சிறந்த அணித்தலைவர் என்பதையும் நிரூபித்துள்ளார்.

தொடரின் இரண்டாவது போட்டியில் வெற்றிபெறும் நிலையிலும் மூன்றாவது போட்டியை சமநிலையில் நிறைவு செய்யும் வாய்ப்பையும் பெற்றிருந்த சிறிலங்கா அணியை தோல்வியடையச் செய்தமை ரிக்கிபொண்டிங்கின் தலைமைக்கு கிடைத்த வெற்றியே.

இத்தோல்வி சிறிலங்காவின் 25வருடகால டெஸ்ட் வரலாற்றில் பெற்ற முதலாவது தொடரின் அனைத்துப் போட்டிகளிலும் தோல்வியாக அமைந்ததுடன் டெஸ்ட் அணித்தலைவர் ஹசான்திலகரட்ண அணித்தலைவர் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்யும் நிலையையும் தோற்றுவித்துள்ளது.

ஒட்டுமொத்தத்தில் தொடர்ந்தும் வெற்றிநடைபோட்டு வரும் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்துவது என்பது கிரிக்கெட் உலகில் சிறப்பான சாதனையாகவே கருதப்படுகின்றது.

மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் 370 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா அணி 18 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இறுதிநாளில் 358 ஓட்டங்களைப் பெறுவதற்கு பத்து விக்கெட்டுக்களும் கைவசம் உள்ள நிலையில் துடுப்பெடுத்தாடிய போதும் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 247 ஓட்டங்களையே பெற முடிந்தது.

மதிய போசன இடைவேளைவரை இரண்டு விக்கெட்டுக்களை இழந்து மிகவும் நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா அணி போட்டியை வெல்லும் வாய்ப்பை இழந்த நிலையில் போட்டி சமநிலையில் முடியும் என்ற தோற்றப்பாட்டை ரசிகர்கள் மத்தியில் ஏற் படுத்தியிருந்த நிலையில் தோல்வியடைந்தமை கிரிக்கெட் ஆர்வலர்களின் வெறுப்பையே சம்பாதித்தது.



# தேசியம், தாயகம், தன்னாட்சி உரிமைக்கு எதிரான எவரையும் தமிழ் மக்கள் ஏற்கார்

வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள தேர்தல் குறித்த பிரச்சாரங்கள் இப்பொழுது தீவிரம் பெற்றுள்ளன. ஆட்சியமைக்கத்துடிக்கும் இரு அணிகளும் சமாதானத்தை ஏற்படுத்த வல்லவர்கள் யார்? என்பதை நிருபிக்கத் துடிப்பது இம்முறை தேர்தலில் முக்கிய மானமாற்றம். ஏனெனில் கடந்த காலங்களைப் போன்று தமிழரை யுத்தம் மூலம் தோற்கடிக்கக்கூடிய வல்லமை பெற்றவர் யார்? என்று போட்டிபோட எவராலுமே முடியாத ஒரு கட்டத்தை கடந்த 20 வருடகாலயுத்தம் உணர்த்தியிருக்கிறது. இலங்கை "சுதந்திரமடைந்த" காலத்திலிருந்து இனவாதப்பிரச்சாரமே தேர்தலில் வெற்றியைத் தீர்மானித்தது. "24 மணி நேரத்தில் சிங்களம்" என்ற கோசம் சந்திரிகாவின் தந்தையார் பண்டாரநாயக்காவிற்கு வெற்றியளித்திருக்கலாம். ஆனால், சந்திரிகா அம்மையாருக்கு அது சாத்தியப்படாது என்பது இப்பொழுது நிருபிக்கப்பட்டிருக்கின்றது.

> *அபிவிருத்திச் சலசலப்புக்கும் மந்திரிப் பதவிகளுக்கும் என்றுமே மயங்கியவர்கள் அல்ல தமிழ் மக்கள் என்பதை வரலாறு காட்டிவருகின்றது. அவர்கள் நடத்திய தியாகப் போராட்டம் உரிமைக்கானது.தமிழர் தேசியம் தமிழர் தாயகம் தன்னாட்சி உரிமை என்பவற்றுக்காகவே அவர்கள் போராடி வருகின்றனர்.*

சிலமாதங்களுக்குமுன்"புலிகளின் பிரச்சினைக்கு" யுத்தத்தை தீர்வாகவைத்த ஜே.வி.பி. கூட சமாதானம் பற்றியும் வடக்கு கிழக்கு மக்களின் அபிவிருத்தி பற்றியும் வாயளவிலாவது பேச வேண்டிய நிலை இம்முறை ஏற்பட்டிருக்கின்றது. கடந்த தேர்தலில்கூட "யானை-புலி கூட்டு" பற்றிப் பேசிய அணி இப்பொழுது புலிகள் தம்முடன் பேசத் தயாராக இருக்கின்றனர் என தர்க்க பூர்வமாக நிருபிக்கவும் அல்லது பொய்யாகக்கூறி மக்களை ஏமாற்றவும் வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்.

இதற்கெல்லாம் காரணம் இன்று தென்பகுதி மக்களிடம் ஏற்பட்டுள்ள மனமாற்றமே கடந்த 20வருட காலமாக சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் மீது புரிந்த யுத்தம் அதனை விடுதலைப்புலிகள் தமது உறுதிதளராத போராட்டத்தால் முறியடித்தமை காரணமாக யதார்த்த நிலையைத் தென்பகுதி மக்கள் புரிந்து கொண்டிருக்கின்றார்கள்.

இதுவரை காலமும் சிங்கள அதிகாரவர்க்கமும் இனவெறியர்களும் தமிழ் மக்களின் உரிமைக்குரல் தொடர்பாகவும் விடுதலைப்புலிகள் நடத்திய உரிமைப் போராட்டம் தொடர்பாகவும் சிங்கள மக்கள் மத்தியில் செய்திருந்த பொய்ப்பிரச்சாரங்கள் குறித்து சிங்கள மக்கள் உணர்ந்து கொண்டுள்ளனர்.

இந்நிலையில் உண்மையிலேயே சமாதானத்தை ஏற்படுத்தக்கூடிய சக்தி எது என்பதை உய்த்துணர்ந்து கொள்ளக்கூடிய நிலையை சிங்கள மக்கள் இதுவரை அடைந்திருப்பார்கள் என்றே நம்பலாம்.

அதேவேளை தமிழ் மக்கள் தமது உண்மையான பிரதிநிதிகள் யார் என்பதைத் தேர்தல் மூலம் வெளிப்படுத்த முன் வந்திருக்கின்றார்கள். அபிவிருத்திச் சலசலப்புக்கும் மந்திரிப் பதவிகளுக்கும் என்றுமே மயங்கியவர்கள் அல்ல தமிழ் மக்கள் என்பதை வரலாறு காட்டிவருகின்றது. அவர்கள் நடத்திய தியாகப் போராட்டம் உரிமைக்கானது தமிழர்தேசியம்தமிழர் தாயகம் தன்னாட்சி உரிமை என்பவற்றுக்காகவே அவர்கள் போராடி வருகின்றனர்.

கடந்த இரண்டுவருட சமாதான கால அர்ப்பணிப்புக்கள் கூட உரிமைக்கான போராட்டத்தின் ஒரு வடிவம் என்பதில் தமிழ் மக்கள் உறுதியுடன் இருக்கின்றார்கள்.

தாயகம், தன்னாட்சி உரிமை இல்லாத ஓர் இனம் எவ்வளவு துன்பங்களை எவ்வளவு நெருக்கடிகளை எவ்வளவு அவமானங்களைச் சந்திக்கநேரிடும் என்பது தமிழ் மக்களுக்கு நன்றாகவே தெரியும் எனவே இப்பொழுது நடைபெறுகின்ற தேர்தலை அவர்கள் எதிர்கொள்ள முடிவெடுத்தும் இதுவரை காலமும் நடத்திய உரிமை போராட்டத்திற்கான அரசியல் அங்கீகாரத்தையும் சர்வதேச அங்கீகாரத்தையும் பெறவே.

எனவே இத்தேர்தலை தமிழ் மக்கள் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்வதானால் முறைகேடுகள் புரிந்து சில நூறு வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற கதிரைகளைக் கைப்பற்றியவர்களையும், தமிழ் மக்களை ஏமாற்றலாம் என நினைத்து "உரிமைக்குரல்" எழுப்பும் பழம் பெருச்சாளி அரசியல் வாதிகளையும் அரசியல் அரங்கிலிருந்து அகற்ற வேண்டும் ஏனென்றால் இவர்களை அரசியலரங்கில் விட்டுவைத்தால் இவர்கள் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிராக பெரும்பாதிப்புகளை, கேடுகளை ஏற்படுத்துபவர்களாகவே இருப்பார்கள்.

ஈ.பி.டி.பி.யினர் கடந்த காலங்களில் செய்த காட்டிக்கொடுப்புக்கள் துரோகத்தனங்கள் குறித்து தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள் உலகுடனேயே எதுவித தொடர்புமற்றிருந்த தீவகமக்களின் பெயராலும், முறைகேடான வாக்குகளாலும் 9 பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றி சிங்கள அதிகாரவர்க்கத்துக்கு அரசியல் ரீதியாக முண்டு கொடுத்தவர்கள் இவர்கள் அத்துடன் துணைப்படை என்றரீதியில் சிறிலங்கா ஆட்சியின் அங்கீகாரத்துடன் கூலிப்படையாக பெருமளவு போராளிகளும் பொதுமக்களும் உயிரிழக்கவும் துன்பம் அனுபவிக்கவும் காரணமானவர்கள்.

தமிழ் மக்கள் யுத்தம், இடப் பெயர்வு அனர்த்தங்களால் அலைந்து திரிய அதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்

வேலவன்

படுத்திக் கொண்டு சொகுசு வாழ்க்கை வாழ்ந்தவர்கள் அபிவிருத்தி என்று கூறி அமைச்சுப்பதவியை ஏற்று இவர்கள் செய்தது என்ன என்பது மக்களுக்கு நன்கு தெரியும் தமிழ்த் தேசியம் என்ற ஒன்றில்லை என்று கூறிவிட்ட இவர்களை அகற்றித்தள்ளும் வழிதெரியாது தவித்த மக்களுக்கு இம்முறை ஒரு வழி திறந்திருக்கிறது இதனைத் தமிழ் மக்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

அடுத்தது ஆனந்தசங்கரி இவர் தேர்தலில் வெற்றி பெற்றால் என்ன செய்வார் என்பது தமிழ் மக்களுக்குத் தெரியும். அத்துடன் அவர் என்ன செய்வார் என்பது சந்திரிகாவுக்கும் தெரியும். விமல்வீரவன்சவுக்கும் தெரியும். ஈ.பி.டி.பி.யானது முந்தும.ஐ.ம.சு.முன்னணிக்கு வெளியிலிருந்து ஆதரவு தெரிவித்திருந்தது. இதேவேளை டக்ளஸ், ஆனந்தசங்கரியின் ஆதரவுடன் பலம் பொருந்திய ஆட்சியமைக்கும் கனவுடன் சந்திரிகாவின் கூட்டணி இருக்கின்றது. ஆட்சியமைக்கக்கூடிய பலம் சந்திரிகாவின் கூட்டணிக்கு கிடைக்கின்றதோ என்னவோ ஆனந்தசங்கரியின் ஆதரவு தனக்குக்கிடைக்கும் என்ற நம்பிக்கை சந்திரிகாவுக்கு உண்டு அவ்வாறு அவர் நம்புவதற்குக் காரணங்கள் உண்டு. ஏழு வருடங்களாக சந்திரிகா நடத்திய சமாதானத்துக்கான யுத்தத்தின போது ஆனந்தசங்கரி எவ்வாறு நடந்து கொண்டார் என்பது சந்திரிகாவுக்கு நன்கு தெரியும். சந்திரிகாவையும் சந்தித்தேன் ரணிலையும் சந்தித்தேன் ஆனால் என்ன கதைத்தேன் என்று சொல்லமாட்டேன் என்று கூறுகிறார். ஆனந்த சங்கரி கதைத்தது தமிழ் மக்களின் நன்மைக்காகத்தான் என்றால் சொல்லாமல் மறைப்பது ஏன்? அவ்வாறு சொன்னால் 4 வாக்காவது கூடக்கிடைக்காதா? வாக்குக்காக செத்தவரையே குசலம் விசாரிக்கும்

> *சந்திரிகாவையும் சந்தித்தேன் ரணிலையும் சந்தித்தேன் ஆனால் என்ன கதைத்தேன் என்று சொல்லமாட்டேன் என்று கூறுகிறார் ஆனந்தசங்கரி கதைத்தது தமிழ் மக்களின் நன்மைக்காகத்தான் என்றால் சொல்லாமல் மறைப்பது ஏன்?*

ஆனந்தசங்கரியார் அதற்காகவாவது தம்பட்டம் அடித்திருப்பாரே? இதையெல்லாம் புரியாதவர்கள் அல்ல தமிழ் மக்கள். எனவே இவர்களை மட்டுமல்ல தமிழ்த்தேசியம், தாயகம், தன்னாட்சி உரிமை என்ற தமிழ்மக்களின் உறுதியான கோட்பாடுகளுக்கு குந்தகம் விளைவிக்கும் எவரையுமே நிராகரிக்கத் தமிழ் மக்களுக்கு இப்பொழுது வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது.

இதற்கு வாக்களிப்பு வீதத்தை அதிகரிப்பதன் மூலமே இன்றைய தேர்தலில் இவ்வாறானவர்களை முற்றாக நிராகரிக்க முடியும் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் எனவே அனைவரும் சென்று இதனையும் ஒரு போராட்டம் போல கருதி தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு வாக்களிப்பதன் மூலம் தமது இலக்கை எய்த முடியும்.

---

## வேகக்கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்காவிடின் வீதி விபத்துக்களைத் தடுத்துவிட முடியாது

### -கிளி.மாவட்ட வைத்திய அதிகாரி சிவானந்தன்

(அலுவலகச் செய்தியாளர்)

வேகக்கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளை யாவரும் கடைப்பிடிக்கத்தவறும் பட்சத்தில் வீதி விபத்துக்கள் ஏற்படுவதனை எவராலும் தடுத்துவிடமுடியாது.

இவ்வாறு நேற்றுமுன்தினம் கிளிமாவட்ட வைத்தியசாலையில் இடம்பெற்ற பாரவூர்தி உந்துருளி விபத்தில் மரணமான யாழ் கிராம உத்தியோகஸ்தர் சொ.பாலச் சந்திரனின் சடல பரிசோதனையின்போது கிளி மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சிவானந்தன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில; கடந்த சிலவாரங்களுக்குள் மேற்படி பகுதியில் மூன்று வாகன விபத்துக்கள் இடம் பெற்றுள்ளதெனவும், எனவே இவ்விபத்துக்கள் யாவும் வீதி போக்குவரத்து ஒழுங்கினை வாகன ஓட்டிகள் சரிவரக் கடைப்பிடித்து நடக்காமையினாலேயே ஏற்படக்காரணமாக அமைந்துள்ளதெனவும்.

எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட துறைசார் திணைக்களங்களும் இதில் கூடிய கவனம் எடுத்து அதற்கான சமிக்ஞைகளை அந்தந்த இடங்களில் நிறுவுவது அவசியம் எனவும் குறிப்பிட்டார். அதாவது குறிப்பாக முகமாலை முதல் புளியங்குளம் வரை, ஏ9 நெடுஞ்சாலையில் வாகன ஓட்டிகள் கடைப்பிடிக்கவேண்டிய குறியீட்டுக்கள் மற்றும் தரிப்பிடங்கள் குறித்தவற்றினை நிறுவுவதுடன் காவல்துறையினரும் இவ்விடயத்தில் மேலும் தீவிர கவனமெடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமெனவும். அத்துடன் வாகன ஓட்டிகளும் வீதி ஒழுங்கு நடைமுறைகளை இப்பகுதிகளில் கண்டிப்பாக கடைப்பிடிக்கும் பட்சத்திலேயே இது போன்ற விபத்துக்கள், உயிரிழப்புக்களைத் தவிர்க்கமுடியுமென்றார். (சோ)

## தெல்லிப்பளை அரசினர்வைத்தியசாலை இயங்க படையினர் அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயத்துள் முடக்கிவைக்கப்பட்டுள்ள தெல்லிப்பளை வைத்தியசாலையினை மீண்டும் இயல்பாக இயங்கச்செய்வதற்கு தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 14 வருடங்களுக்கு மேலாக மேற்படி வைத்தியசாலை இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயத்தினுள் படையினரால் முடக்கிவைக்கப்பட்டுள்ளதுடன் அரசு- புலிகளுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்னரும் கூட இதனை புனரமைத்து இயல்பாக இயங்கவிடுவதற்கு படையினர் பெரும் முட்டுக்கட்டையாகவே இருந்துவருகின்றனர்.

எனினும் இவ்வைத்தியசாலை தனது சொந்த இடதில் இயங்காது வைத்தியசாலைக் குரிய அடிப்படைவசதிகள் அற்ற தற்காலிக இடத்திலேயே இயங்கி வருவதால் நோயாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டே இவ்வைத்தியசாலையை அதன் சொந்த இடத்தில் இயல்பாக இயங்க வைப்பதற்கு தீவிரமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற போதும் படையினர் விட்டுக்கொடுப்புக்களைச் செய்வதற்கு பின்னிற்பதாகவே இவ்வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினர் தெரிவிக்கின்றனர். (33)

## க.பொ.த.சாதாரண பரீட்சை 2003 பெறுபேறுகள் உயர்வு!

(கொழும்பு)

2003 ஆம் ஆண்டின் கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின்படி 2002 ஆம் ஆண்டைக் காட்டிலும் சித்தியெய்தியோரின் வீதம் உயர்ந்துள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த உயர்வு வீதம் 4.5 ஆகும் அதேநேரம் அனைத்துப் பாடங்களிலும் அதிவிஷேட சித்தியெய்தியோரின் தொகை 3038 ஆகும். இது கல்வித்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னேற்றகரமான செயற்பாடுகளின் பிரதிபலன் ஆகும் என கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. இதேவேளை கடந்த கல்வி பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றியோரில் ஒரு லட்சத்து 26 ஆயிரத்தி 500 பேர் உயர்தரத்திற்குத் தகுதி பெற்றுள்ளனர். இது கடந்த வருடத்தைக் காட்டிலும் 40 வீத அதிகரிப்பாகும். இதில் கணித பிரிவில் 33 வீதமானவர்களும், ஆங்கிலப்பிரிவில் 34 வீதமானோரும் சித்தியெய்தியுள்ளார்கள்.

## ஈருருளி- உந்துருளி விபத்தில் ஒருவர் படுகாயம்

(அலுவலகசெய்தியாளர்)

ஈருருளியுடன் உந்துருளி மோதியதில் உந்துருளியில் பயணித்தவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொண்டு வருகின்றார்.

மேற்படி சம்பவம் நேற்றுமுன்தினம் பூநகரி 4ம் கட்டைப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.இச்சம்பவத்தில் முழங்காவிலைச் சேர்ந்த இ.தபோதரன் என்பவரே பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொண்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

## பழுதடைந்த வீதியால் மக்கள் பெரும் சிரமம்

முல்லைத்தீவு செல்வபுர வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாத நிலையில் போக்குவரத்து வாகனங்கள் தொடர்ந்து பயணித்து, பாரஊர்திகளும் பயணித்ததினால் பாதைகள் மிக மோசமாக பாதிப்படைந்து போக்குவரத்து செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.தற்போது மணல்குவியல்கள் (கிரவல்) பறிக்கப்பட்டு திருத்த வேலைகள் நடைபெறாததினால் போக்குவரத்துச் சேவை பேருந்துகள் அனைத்தும் முல்லைத்தீவு வட்டுவாகல் வீதியினூடாக நடைபெறுகிறது. இதனால் செல்வபுரமக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர். (20)

# அரசாங்க அறிவித்தல்

## பாராளுமன்றத் தேர்தல் 2004.04.02

## தேர்தல் மாவட்டம் இல. 10. யாழ்ப்பாணம்

அரச கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் உள்ள வடமராட்சி கிழக்கு (ஒரு பகுதி), பச்சிலைப்பள்ளி, கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய பிரதேசங்களில் உள்ள வாக்காளர்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. புதிய வாக்கெடுப்பு நிலையங்களின் பெயர்கள் அந்தந்த வாக்கெடுப்பு நிலையத்தின் பெயருக்கு எதிரே குறிக்கப்பட்டுள்ளன.

**அந்தந்த பிரதேச வாக்காளர் யாவரும் திருத்தப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களிலேயே வாக்களித்தல் வேண்டும்.**

சே.பத்மநாதன்
தேர்வித்தாட்சி அலுவலர்
தேர்தல் மாவட்டம் இல. 10- யாழ்ப்பாணம்
2004.03.21

### வாக்கெடுப்புப் பிரிவு 'எ' பருத்தித்துறை

| வாக்கெடுப்பு மாவட்ட இல. | தற்போழுதுள்ள வாக்கெடுப்பு நிலையங்கள் | திருத்தப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்கள் |
|---|---|---|
| 36 | யா/செம்பியன்பற்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை இல. எ/36 முகமாலை |
| 37 | யா/தாழையடி றோமன்கத்தோலிக்க தமிழ் கலவன்பாடசாலை | தற்காலிக கொட்டகை இல. எ/37 முகமாலை |
| 38 | யா/மருதங்கேணி இந்து தமிழ் கலவன்பாடசாலை | தற்காலிக கொட்டகை இல. எ/38 முகமாலை |
| 39 | யா/உடுத்துறை மகா வித்தியாலயம் | தற்காலிக கொட்டகை இல. எ/39 முகமாலை |
| 40 | யா/ஆழியவளை இலங்கை கிறிஸ்தவ ஆலய தமிழ் கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை இல. எ/40 முகமாலை |
| 41 | யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வர வித்தியாலயம் | தற்காலிக கொட்டகை இல. எ/41 முகமாலை |
| 42 | யா/கேவில் அரசினர் தமிழ் கலவன்பாடசாலை | தற்காலிக கொட்டகை இல. எ/42 முகமாலை |
| 43 | யா/உபஅஞ்சல் அலுவலகம் சுண்டிக்குளம் | தற்காலிக கொட்டகை இல. எ/43 முகமாலை |

### வாக்கெடுப்புப் பிரிவு 'க' கிளிநொச்சி

| வாக்கெடுப்பு மாவட்ட இல. | தற்போழுதுள்ள வாக்கெடுப்பு நிலையங்கள் | திருத்தப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்கள் |
|---|---|---|
| 01 | கி/வேம்பொருகேணி அரசினர் தமிழ் கலவன்பாடசாலை | தற்காலிக கொட்டகை இல. க/1, முகமாலை |
| 02 | கி/பளை மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை இல. க/2, முகமாலை |
| 03 | கி/வேம்பொருகேணி மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை இல. க/3, முகமாலை |
| 04 | கி/பளை மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை இல. க/4, முகமாலை |
| 05 | கி/பளைமகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை இல. க/5, முகமாலை |
| 06 | கி/சோறன்பற்று கணேச வித்தியாலயம் | தற்காலிக கொட்டகை இல. க/6, முகமாலை |
| 07 | கி/முகாவில் அரசினர் தமிழ் கலவன்பாடசாலை | தற்காலிக கொட்டகை இல. க/7, முகமாலை |
| 08 | கி/கோவில் வயல் அரசினர் தமிழ்கலவன்பாடசாலை | தற்காலிக கொட்டகை.இல.க/8,முகமாலை |
| 09 | கி/பரந்தன் இந்துமகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/9,முகமாலை |
| 10 | கி/கண்ணகைபுரம் அரசினர் தமிழ் கலவன்பாடசாலை | தற்காலிக கொட்டகை.இல.க/10,முகமாலை |
| 11 | கி/முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/11,முகமாலை |
| 12 | கி/முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/12,முகமாலை |
| 13 | கி/முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/13,முகமாலை |
| 14 | கி/பரந்தன் இந்துதமிழ்கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை.இல.க/14,முகமாலை |
| 15 | கி/பரந்தன் இந்துதமிழ்கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை.இல.க/15,முகமாலை |
| 16 | கி/உருத்திரபுரம் மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/16,முகமாலை |
| 17 | கி/உருத்திரபுரம் மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/17,முகமாலை |
| 18 | கி/கிளிநொச்சி கனிஷ்டவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/18,முகமாலை |
| 19 | கி/கிளிநொச்சி கனிஷ்டமத்தியமகா வித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/19,முகமாலை |
| 20 | கி/கனகாம்பிகை மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/20,முகமாலை |
| 21 ஆ | கி/திருவையாறு மகாவித்தியாலயம்(ஆண்வாக்காளர்கள்) | தற்காலிக கொட்டகை.இல.க/21ஆ,முகமாலை |
| பெ | கி/திருவையாறு மகாவித்தியாலயம்(பெண்வாக்காளர்கள்) | தற்காலிக கொட்டகை.இல.க/21பெ,முகமாலை |
| 22 | கி/கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/22,முகமாலை |
| 23 | கி/பரந்தன் இந்து வித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/23,முகமாலை |
| 24 | கி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி | தற்காலிக கொட்டகை.இல.க/24,முகமாலை |
| 25 | கி/பாரதிபுரம் மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/25,முகமாலை |
| 26 ஆ | கி/கனகபுரம் அரசினர்தமிழ்கலவன் பாடசாலை(ஆண்வாக்காளர்) | தற்காலிக கொட்டகை.இல.க/26ஆ,முகமாலை |
| பெ | கி/கனகபுரம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை(பெண்வாக்காளர்கள்) | தற்காலிக கொட்டகை.இல.க/26பெ,முகமாலை |
| 27 | கி/ஸ்கந்தபுரம் மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/27,முகமாலை |
| 28 | கி/அக்கராயன் மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/28,முகமாலை |
| 29 | கி/கண்டாவளை மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/29,முகமாலை |
| 30 | கி/வட்டக்கச்சி மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/30,முகமாலை |
| 31 | கி/வட்டக்கச்சி மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/31,முகமாலை |
| 32 | கி/பெரியகுளம் மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/32,முகமாலை |
| 33 ஆ | கி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம்(ஆண்வாக்காளர்கள்) | தற்காலிக கொட்டகை.இல.க/33ஆ,முகமாலை |
| பெ | கி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம்(பெண்வாக்காளர்கள்) | தற்காலிக கொட்டகை.இல.க/33பெ,முகமாலை |
| 34 | கி/தர்மபுரம் இல.01,அரசினர் தமிழ்கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை.இல.க/34,முகமாலை |
| 35 | கி/பிரமந்தனாறு அரசினர் தமிழ்கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை.இல.க/35,முகமாலை |
| 36 | கி/வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/36,முகமாலை |
| 37 | கி/கறுக்காய்த்தீவு மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/37,முகமாலை |
| 38 | கி/கறுக்காய்த்தீவு மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/38,முகமாலை |
| 39 | கி/பூநகரி மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/39,முகமாலை |
| 40 | கி/பூநகரி மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/40,முகமாலை |
| 41 | கி/பூநகரி மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை. இல. க/41, முகமாலை. |
| 42 | கி/கௌதாரிமுனை அரசினர் தமிழ் கலவன்பாடசாலை | தற்காலிக கொட்டகை. இல. க/42, முகமாலை. |
| 43 | கி/செம்பன்குன்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை. இல. க/43, முகமாலை. |
| 44 | கி/தம்பிராய் அரசினர் தமிழ் கலவன்பாடசாலை | தற்காலிக கொட்டகை. இல. க/44, முகமாலை. |
| 45 | கி/நல்லூர் மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை. இல. க/45, முகமாலை. |
| 46 | கி/வேரவில் இந்து தமிழ் கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை. இல. க/46, முகமாலை. |
| 47 | கி/வேரவில் இந்து தமிழ் கலவன்பாடசாலை | தற்காலிக கொட்டகை. இல. க/47, முகமாலை. |
| 48 | கி/கரியாலை நாகபடுவான் இல.03 பாடசாலை | தற்காலிக கொட்டகை. இல. க/48, முகமாலை. |
| 49 | கி/முழங்காவில் மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை. இல. க/49, முகமாலை. |
| 50 | கி/இரணைமாதா றோமன் கத்தோலிக்க பாடசாலை | தற்காலிக கொட்டகை. இல. க/50, முகமாலை. |

**தி.இராசநாயகம்,**
**அரசாங்க அதிபர்,**
**கிளிநொச்சி.**

(சி-9432)



## சிந்தனைக்கு

இலட்சியத்தால் ஒன்றுபட்டு எழுச்சி கொண்ட மக்களை எந்த ஒரு சக்தியாலும் ஒடுக்கிவிடமுடியாது.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 30 -03-2004


# ஐ.ம.சு.மு. ஆட்சிக்கு வந்தால் டோக்கியோ நிதி தேவையில்லை

## ஜே.வி.பி. செயலாளர் ரில்வின்சில்வா

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்தால் டோக்கியோ நிதி எமக்குத் தேவையில்லை ஐ.தே .மு.ஆட்சியின் போது அமைச்சர்கள் கொள்ளையடித்த பணத்தை மீள பெற்றாலே நாட்டைக் கட்டி யெழுப்ப முடியுமென ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரி வித்துள்ளார்.ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி ஆட்சிக்கு வந்தால் டோக் கியோ நிதி கிடைக்காதென ஐ.தே.முன்னணி பிரச்சாரம் செய்துவருகிறது எமக்கு டோக்கியோ நிதி தேவையில்லையென அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டியில் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## -பாதுகாப்பு அமைச்சை வசப்படுத்திய சந்திரிகா-

# மகேஸ்வரன் கொலை முயற்சிக்கு என்ன பதில் கூறப்போகிறார்?

முன்னாள் இந்துகலாச்சார அமைச்சரும் , கொழும்பு மாவட்டத்தில் ஐக்கியதேசியக் கட்சி சார்பாக போட்டியிடும் வேட் பாளருமான தி.மகேஸ்வரன் மீதான துப்பாக்கிச்சூட்டுக்கொலை முயற்சிக்கு பாதுகாப்பு மற்றும் உள் துறை அமைச்சரான சனாதிபதி சந்திரிகாவே பதில் கூறவேண்டுமென ஐ.தே. கட்சியின் பொதுச் செயலாளர் செனரத்கப்பு கொட்டுவ கூறியுள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு அச் சுறுத்தலுக்கு உள்ளாகிவருவதாகக் கூறி இந்த அமைச்சுக்களை எம்மடமிருந்து பொறுப்பேற்ற சனாதிபதி ஐ.தே.க. வேட்பாளர் மீதான இந்தக் கொலை முயற்சிக்கு என்ன பதிலைத் தரப போகிறார் இதனைத்தான் இன்று நாட்டு மக்கள் எதிர்பார்த்திருக்கின்றார்களென அவர் கேள்வி எழுப்பியுள்ளார். எங்கள் கட்சி வேட்பாளர்கள் பலரும் அச் சுறுத்தலுக்குள்ளாகியிருப்பதாகத் தெரிவித்து அவர்களது பாதுகாப்பைப் பலப் படுத்துமாறு நாங்கள் சனாதிபதியைக் கேட்டோம். தேர்தல் ஆணையாளருக்கும் விண்ணப்பித்தோம் ஆனால் எதுவும் நடக்கவில்லை எனக் கூறி தனது கவலையை வெளியிட்டஅவர், இன்னும் காலம் கடந்து விடவில்லை இனியாவது எமது வேட்பாளர்களுக்கு கூடுதல் பாதுகாப்பை வழங்குவதை சனாதிபதி உறுதிப்படுத்தவேண்டும் எனத் தெரிவித்தார்.

இக்கொலை முயற்சிதொடர்பாக் துரிதகதியில் விசாரணை நடத்தி சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை சட்டத்தின் முன் கொண்டுவர வேண்டுமென நாம் சனாதிபதி, பொலிஸ்மா அதிபர் தேர்தல் ஆணையாளர் ஆகியோரிடம் கேட்டுக் கொள் கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# அறுதிப் பெரும்பான்மை பெற்று எவரும் ஆட்சியமைக்கப் போவதில்லை

## -கொழும்பு பல்கலைக்கழக அரசியல்துறை விரிவுரையாளர்

எதிர்வரும் தேர்தலின் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியோ அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியமைக்கப் போவதில்லை யென கொழும்பு பலகலைக்கழகஅரசியல்துறை விரி வுரையாளர் றோலெரன் எதிரிசிங்க தெரிவிததுள்ளார்.

தேர்தல நிலைமை சம்மந்தமாக வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளிக் கையில் அவர்இதனை தெரிவித்துள்ளார் பிரதமர் ரணில் புலிகளுக்கு அதிக சலுகைகளை வழங்கி நாட்டின் பாதுகாப்பை பலவீனப் படுத்தியுள்ளார் என்ற சனாதிபதியின் குற்றச்சாட்டு உண்மையிலேயே ஏற்க முடியாத ஒன்றாகும் இதனால் எழுந்த கருத்து வேறு பாடு காரணமாகவே நான்கு வருடங்களுக்குள் மூன்றாவது தேர்தல் மக்கள் மீது திணிக்கப் பட்டுள்ளது.

இத் தேர்தலில் அறுதிப்பெரும்பான்மை எவருக்கும் கிடைக் கப் போவதில்லை. இதனால் சமாதான முன்னெடுப்பு நடவடிக் 'கைகளை முன்னெடுப் பதில் எதிர்காலத்திலும் பல நெருக் கடிகளை எதிர்நோக்க வேண்டி யேற்படுமென அவர் மேலும் தெரி வித்தள்ளார்.

# இவ்வாரம் நடைபெறவுள்ள தேர்தல் அர்த்தமற்ற தொன்றாகும்

## சிறிலங்காப்பிரதமர் ரணில்

இவ்வாரம் நடைபெறவுள்ள தேர்தல் அர்த்தமற்ற ஒரு தேர்தலாக இருக்குமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார் இதேவேளை எனது ஆட்சிக்காலத்தின் போது மேறகொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் மூலம் புலிகளை சமஷ்டிஅமைப்பு ஒன்றை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக மாற்ற என்னால் முடிந்தது. இப்போது புலிகளோடு அரசியல் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டிய முக்கிய கட்டமாகும் என அவர் சுட்டி ககாட்டியுள்ளார்.

# சண்டே லீடர் அச்சகத்தில் பொலிசார் திடீர் தேடுதல்

இரத்மலானையிலுள்ள சண்டே லீடர் அச்சகம் கல்கிசை பொலிசாரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டிருக்கிறது.

கடந்த ஞாயிறன்று திடீரென வந்த பொலிசார் அங்கு சட்டவிரோதமான துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டுள்ள தகவல் கிடைத்துள்ளதாகவும் அதனால் தேடுதல் நடத்த வந்திருப்பதாகவும் அச்சக பாதுகாப்பு ஊழியர்களிடம் கூறியுள்ளனர்.எனினும் பாதுகாபபு ஊழியர்கள் முன்னறிவித்தல் எதுவுமின்றி வந்திருப்பதால் அனுமதிக்க முடியாது என தெரிவித்துள்ளனர். இதற்குப் பதிலளித்த பொலிசார் உயர்மட்டத்தின் உத்தரவின் பேரில் தாம் தேடுதல் நடத்த வந் திருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தெரிவிக்கும் போது ஊடகத்துறைக்கு விழுந்த முதல் அடி இது என்று தெரிவித்துள்ளார்.டெய்லி மிரர் பிரதம ஆசிரியர் இது தொடர்பாகப் பொலிசாரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது இப்படியொரு சம்பவம் இடம் பெறவில்லை எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# ஐ.ம.சு.மு. தாக்குதல் கும்பலில் முன்னாள் பொலிஸ் அதிகாரி

மாத்தளை மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளரின் ஆதரவாளர் மூவர் ஆயுதங்கள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப் பட்டுள்ளனர். இவர்களில் முன்னாள் பொலிஸ் அதிகாரி ஒருவரும் அடங்குகிறார்.

அவர்களிடம் இருந்து வாள்கள், கத்திகள், கற்கள் நிரப்பப் பட்ட இரும்புக் கொல்கலன்கள், சைக்கிள் செயின்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன. இவர்களில் ஒருவர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் என தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் முன்னாள் பா.உ.ஜனக பண்டார தென்னக்கோனின் ஆதரவாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# மக்கள் விரோதிகள்

''யாழ்.மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்பாளர்களாக தமிழர்களை நியமிக்க வேண்டாம்'' என ஈ.பி.டி.பி.யின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தேர்தல் கண்காணிப்புக் குழுவினைக் கேட்டுக் கொண்டுள்ளார். இவ்வாறு ஈ.பி.டி.பி குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கைக்கு அவர் தமிழ் அதிகாரிகள் மீதும் தமிழ் மக்கள் மீதும் நம்பிக்கை கொண்டிருக்காமையே காரணமாகும்.

ஈ.பி.டி.பி.யினர் தேர்தல் பிரச்சாரப் பணிகளில் ஈடுபடுகையில் அவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் அடிக்கடி முறுகல் நிலை ஏற்படுவது வழமையாகிவிட்டது. ஈபி.டி.பி.யினர் பல இடங்களில் தேர்தல் பிரச்சாரத்திற்கென சென்றவேளையில் மக்களினால் துரத்தி அடிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் துண்டுப்பிரசுரங்களும்பதாகைகளும் கிழித்தெறியப்பட்டுள்ளன. தீயிட்டுக் கொழுத்தப்பட்டும் உள்ளன.

இதனை ஒத்தநிலையே ஆனந்தசங்கரியின் குழுவினருக்கும் நடைபெற்றுள்ளது. கடந்த இரு தினங்களுக்கு முன்னர் வடமராட்சியில் பிரச்சாரத்திற்குச் சென்ற சங்கரியார் குழுவினர் வல்வை வெளிவரையில் மக்களினால் துரத்தியடிக்கப்பட்டனர். இதேபோன்று தென்மராட்சியிலும் சம்பவம் இடம்பெற்றது.

மக்களினால் வளிப்படுத்தப்படும் இவ் எதிர்ப்புக்களுக்கு டக்ளஸ் தேவானந்தாவும், ஆனந்த சங்கரியாரும் விடுதலைப்புலிகளே இதன் பின்னணியில் இருப்பதாகக் குற்றம் சாட்டுகின்றனர். தமது பிரச்சாரத்திற்கு குந்தகம் விளைவிக்கப்படுவதாக தேர்தல் ஆணையாளருக்கு முறைப்பாடும் செய்துள்ளனர்.

ஆனால், இவை எந்தளவிற்கு உண்மைத் தன்மை கொண்டவை? ஆனந்த சங்கரியாரையும், டக்ளஸ் தேவானந்தாவையும் மக்கள் விரட்டி அடிப்பதற்குக் காரணம் இல்லையா? புலிகள் இதன் பின்னால் இருக்கவேண்டிய தேவைதான் என்ன? அதாவது மக்கள் விரோதிகளாக அவர்களே இருக்கையில், அவர்களை விரட்டப்புலிகள் பின்னணியில் இருக்கத் தான் வேண்டுமா?

இன்று தமிழ் மக்களின் வாக்குகளைக் கோரித் தேர்தலில் குதித்துள்ள இவர்கள் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு எந்தளவிற்கு மதிப்பளித்தனர். தமிழ் மக்களுக்கு இவர்கள் பெற்றுக்கொடுத்ததுதான் என்ன? இவர்கள் தமிழ் மக்கள் மீது கொணடுள்ள நம்பிக்கை தான் என்ன?

தமிழ் மக்கள் தமது உரிமைக்காகப் பெருமளவான இரத்தம் சிந்தியபோதும், பெரும் துன்பங்களை அனுபவித்தபோதும் இவர்கள் தமிழ் மக்களுக்கு எதிராகவே செயற்பட்டனர். டக்ளஸ் தேவானந்த குழுவினர் சிறிலங்கா ஆயுதப்படையினருடன் இணைந்து தமிழ் இனத்திற்கு எதிரான போரில் பங்கெடுத்துக்கொண்டார். சங்கரியாரோ தமிழ்மக்களின் உரிமைப்போராட்டத்தைத் தோற்கடிப்பதற்கான ஆலோசனை வழங்கினார்.

ஆனந்தசங்கரியார் தனது 40 வருடகால அரசியல் வாழ்க்கை பற்றியும், தான் பெருமை மிக்க சிங்களத் தலைவர்களுடன் பாராளுமன்றத்தில் இருந்ததாகவும் பெருமை பேசுகின்றார். ஆனால், அவர் அக்காலத்தில் தமிழ் மக்களுக் குப் பெற்றுக்கொடுத்ததுதான் என்ன? அத்தோடு ஆனந்த சங்கரியார் தனது அரசியல் வாழ்க்கையில் ஒரே கொள்கைக்காகவும், கோட்பாட்டிற்காகவும் வாழ்ந்ததுண்டா? அவர்எத்தனை கட்சியில் அங்கம்வகித்தார்? திறப்புச் சின்னத்தில் (லங்கா சமசமாஜக்கட்சி) தேர்தலில் போட்டியிடத் தொடங்கிய சங்கரியார் பூட்டுச் சின்னம் (சுயேச்சைக்குழு) வரை வந்தது ஏன்?

டக்ளஸ் தேவானந்தா குழுவினர் சுமார் 10 வருடங்களுக்கு மேலாக பாராளுமன்றத்தில் அங்கம் வகித்து தமிழ் மக்களுக்குச் செய்தது தான் என்ன? திகதியிடப்பட்ட காசோலை வழங்கி மக்களை ஏமாற்றியதைத்தவிர இவர்கள் தமிழ் மக்களுக்குச்செய்த நன்மைதான் என்ன?

சரி, தற்பொழுது கூட தேர்தல் பிரச்சாரத்திற்கு வரும் இவர்கள் தமிழ் வாக்காளர்கள்/ மக்கள் மீது நம்பிக்கை கொண்டா தேர்தல் பிரச்சாரத்திற்கு வருகின்றார்கள், அவ்வாறு வருவதானால் அவர்கள் ஏன் சிறிலங்கா ஆயுதப் படைகளினதும், பொலிசாருடனும் பிரச்சாரத்திற்கு வருதல் வேண்டும்? தம்மை மக்களின் தோழர் எனத் தம்மைப் பிரச்சாரப்படுத்துகின்றவர்கள் மக்கள் மீது நம்பிக்கை கொண்டு சிங்களப்படையின் பாதுகாப்பின்றி மக்கள் முன்வர ஏன் தயங்க வேண்டும்?

இறுதியாகத் தமிழ் அதிகாரிகளை தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுத்த வேண்டாம். சிங்களவர்களை ஈடுபடுத்துமாறு கோரும் இவர்கள் தமிழ் மக்களிடம் வாக்குக்கு மட்டும் வருவரானேன்? இவர்களைத் தமிழ் மக்கள் ஓட ஓட விரட்டியடிப்பதும், தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவதைத் தடுத்து நிறுத்துவதிலும் என்ன தவறு இருக்கின்றது. தமது மக்களிடம் இருந்து அந்நியப்பட்டுப்போயுள்ள இவர்கள் மக்களின் உணர்வுகளுக்கும், விருப்புகளுக்கும் துரோகம் இழைக்கும் வகையில் செயற்படும் இவர்கள் தேர்தல் வரும்போது மட்டும் மக்கள் தமக்கு வெற்றிலைபாக்கு வைத்து வரவேற்பார்கள் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

தமிழ் மக்கள் மீது ஒடுக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டுள்ள சிங்கள ஆட்சியாளர்களின் ஆதரவாளர்களாகவும், ஒடுக்குமுறைக் கருவியாக உள்ள சிங்கள ஆயுதப்படைகளின் உதவியுடனும் மக்களிடம் செல்லும் இவர்கள் வாக்குக் கேட்டுச் செல்கின்றார்களா அன்றி வாக்காளர்களை வேட்டையாடச் செல்கின்றார்களா?என எவ்வாறு மக்களினால் பிரித்துப்பார்க்க முடியும் மக்களின் உணர்வுகள் துயர்களில் பங்கேற்காத இவர்கள் தேர்தல் வரும்போது மட்டும் தேடிவருவதால் மக்கள் இந்தளவுடன் கூட தப்பிச்செல்ல விடுவது அவர்களின் பெருந்தன்மையாகவே இருக்கும். இதனைப் புரிந்து கொள்ளுதலே அவர்களுக்கு நல்லது.

## அதிகாரி நியமனம்

அரசாங்க ஊடகங்களில் செய்திச் சமநிலையைப் பேணுவதற்காக தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். 17வது அரசியலமைப்பின் தேர்தல் தொடர்பில் தமக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படையில் தேர்தல் ஆணையாளர் டபிள்யூ.டி.ஏ பெரேரா என்பவரை தகுதி வாய்ந்த அதிகாரியாக நியமித்துள்ளார்.

## கரடிப்போக்குப் பாலம் மக்கள் பாவனைக்குத் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்திக்கருகாமையில் ஏ-9 பிரதான வீதியில் புதிதாக அமைக்கப் பெற்ற பாலம் நேற்று நண்பகல் பொதுமக்கள் பாவனைக்கென திறந்து விடப்பட்டது.

கிளிநொச்சி நகரினை சிங்களப் படையினர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த பொழுது மேற்படி பாலம் சிங்களப்படையின ரால் தகர்க்கப்பட்டிருந்தது. மீண்டும் தற்காலியமாக இரும்புப் பாலம் அமைக்கப் பெற்றிருந்த இப் பாலத்தின் புனரமைப்பு பணிகள் கடந்த சில மாதங்களாக மேற்கொள்ளப்பெற்று வேலைகள் நிறைவுபெற்றதனையடுத்து நேற்றைய தினம் மேற்படி பாலம் பொதுமக்களின் பாவனைக்கு திறந்து விடப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## -பொன்னம்பலம் மருத்துவமனையில்-

## மூக்கு, காது, தொண்டை நோய்களுக்கு விசேட சிகிச்சை

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் வெளிநாட்டிலிருந்து வருகை தந்திருக்கும் வைத்திய நிபுணரினால் மூக்கு, காது, தொண்டை போன்றவற்றில் ஏற்படும் சகல நோய்க ளுக்குமான ஆலோசனைகளும் சிகிச்சைகளும் வழங்கப்படவுள்ளது.

மேற்படி சிகிச்சைகள் இன்றும் நாளையும் காலை8.30 மணிமுதல் பிற்பகல்2.30 மணிவரை கிளிநொச்சி பொன்னம்பலம் ஞாபகார்த்தமருத்துவமனையில் நடைபெறும் எனவும் இதில் பயன்பெறவிரும்புவர்கள் மருத்துவ மனைவெளிநோயாளர் பிரிவுக்கு நேரில் வருகை தருமாறும் மருத் துமனை பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில் 19 05 1944



ஆண்டவன் அடியில் 31 03 2003

### அந்தோனிப்பிள்ளை - செலஸ்ரீன்
### இரணைப்பாலை

*(புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்க முன்னாள் தலைவரும், இரணைப் பாலை கமக்காரர் அமைப்பின் முன்னாள் செயலாளரும்)*

இரணைப்பாலை மண்தந்த புகழ்பூத்த மைந்தனே
அன்புக்கு இலக்கணமாய், பண்பின் இருப்பிடமாய்
பாரினிலே வந்துதித்த எமதன்பு அப்பாவே
பாதியிலே எமைவிட்டு எங்கு சென்றீர்
உமை, எண்ணி தினம்தினம் தவிக்கின்றோம்.

எமது அப்பாவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நாளை (31.03.2004) மாலை 5.00 மணிக்கு இரணைப்பாலை புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

இரணைப்பாலை,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு. (சி-9342)

குடும்பத்தினர்.

## நினைவாஞ்சலி



| 27.02.1942 | தோற்றம் | 06.11.1942 |
|---|---|---|
| 05.01.1971 | மறைவு | 13.04.2000 |

அமரர் சதாசிவம் சற்குணசிங்கம் — அமரர் சற்குணசிங்கம் விஜயலட்சுமி

**திதி-30.03.2004**

04ம் வட்டாரம் மண்டைதீவு

*அன்போடு எம்மை அரவரணைத்து பாசத்துடன் எம்மை வளர்த்து தங்களை உரமாக்கி எங்களை உருவாக்கிய எங்கள் அன்புத் தெய்வங்களே உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.*

அன்னாரின் ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

(சி.9341) மகன்,மகள் குடும்பம்.

### ஈ.பி.டி.பி.

புக்கான மகஜர்ரையும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கான மகஜரையும் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கான மகஜரையும் கையளித்தனர்.

பேரணியில் சென்ற மாணவர்கள் ஈ.பி.டி.பி.யினரின் வன்முறைகளிலிருந்து மாணவர்களை காப்பாற்றி சுதந்திரமாக கல்விகற்க வளிஏற்படுத்தத் தருக என்ற கோசங்களுடனும், சுலோக அட்டைகளையும் தாங்கி மாணவர்கள் பேரணியாக நகர்ந்து சென்றனர். (33,27)

### ஆனந்த...

இருந்துகுடும்பங்களை அழைத்து வந்து பிரச்சார நடவடிக்கைகளில் இத்தரப்புக்கள் பயன்படுத்தி வருகின்றன.

தென்னிலங்கையைச் சேர்ந்த இக்கும்பலைச் சேர்ந்த பலரும்,அப்பகுதிகளிலுள்ள காடையர் குழுக்களைச் சேர்ந்தவர்களென தமிழ்த்தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பலரும் குற்றஞ்சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இக்கும்பலைச் சேர்ந்தவர்களே இராணுவ பாதுகாப்புடன் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அந்தரப்பு மேலும் தெரிவிக்கின்றன. (27)

### புலிகளின்..

சதியை மேற்கொண் டுள்ளதாகவும், அதற்குரியபேச்சு வார்த்தைகளையும் நடத்தி யுள்ளதாக வெளியாகிய செய் தியை அவர் முற்றாக மறுத் துள்ளார். இதே வேளை ஐரோப்பிய ஒன றிய பிரதிநிதிகளுடன் நடை பெற்ற பேச்சுவார்த்தையின் போறு கட்டுப்பாட்டு பகுதி மக்கள் வாக் களிப்பதற்கு உரிய ஒழுங்கு களை கட்டாயமாக மேற்கொள்ள வேண் டுமென நான் வலியுறுத்தியுள் ளேன் என அவர் மேலும் சுட்டிக்காட் டியுள்ளார்.

### சட்ட...

செய்யப்பட்ட அனைவரும்சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

### சிறில...

ஆணையகத்தின் இந்த செயற்பாட்டை எதிர்த்துள்ளாதுடன் இதற்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளர் இந்த அரச இலத்திரனியல் ஊடகங்களைப் பொறுப்பெற்றமையை சர்வதேச அமைப்பான ரான் பரன்சிஇன்ரநஷனல் அமைப்பின் பிரதிநிதி தேர்தல் பிரச்சாரங்கள் எல்லாம் நடந்து முடிகின்ற நிலையிலேயே கையேற்றுள்ளமை மிகவும் காலம் தாழ்த்திய நடவடிக்கை எனக் கூறியுள்ளார்.

ஆனால் முன்னர் நடந்த தேர்தல் காலங்களில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தேர்தல் பிரச்சாரத்திற்காக வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் முடிவடைந்த பின்னரும் தமது கட்சிக்காக அரச இலத்திரனியல் ஊடகங்கள் வழியாகப் பிரச்சாரங்களை மேற்கொண்டதாகவும்,அதைப்பற்றி அவரிடம் கேட்டபோது தேர் தலில் தான் போட்டியாளர் இல்லை எனவும் அதனால் இப்படிச் செய்வது சட்ட விரோ தமாக அமையாது என்றும் கூறியதாகக் கூறியுள்ளார்.

### அமைதியான..

விதத்தில் நாம் மாற்றுக் கருத்துக்களும், சனநாயக உரிமைகளுக்கும் மதிப்பளித்தே வருகிறோம். ஆனால் சன நாயகம் என்ற போர்வையில் தேசத் துரோகிகள் தேசவிரோதக் கருத்துகளையும் சனநாயக விரோத கருத்துக்களையும் மக்கள் மத்தியில் திணித்து வருகின்றனர். இதனையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

எனவே புலிகள் என்பது தனியான ஒருபோராட்டக்குழு அல்ல இது ஒருமக்கள் அமைப்பு என்பதை நிரூபிக்கும் விதமாகவும் புலிகளின், இராணுவபலத்திற் கும் அரசியல் பலத்திற்கும் மேலும் மேலும் வலுச்சேர்க்கும் விதமாகவும்எதிர்வரும் தேர்தலில் மக்கள் தீர்ப்பளித்து வரலாற்றில் மன்னிக்கமுடியாத துரோகிகளை விரட்டியடிப்பர் என்றார்.

இதேவேளை புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச வாக்காளர்கள் வாக்களிப்பதைப் படையினரின் உதவியுடன் குழப்பியடிக்கப் போவதாக சந்திரிகா தமக்கு உறுதியளித்திருப்பதாக ஆனந்த சங்கரி தலைமையிலான சுயேட்சைக் குழுவினரும் ஈ.பி.டி.பியினரும் பிரச்சாரம் செய்து வருகின்றனர். தமிழ் மக்களின் மனோநிலையைக் குழப்பியடிப்பதே இதன் நோக்கமாகும்.இது சனநாயக தேர்தல் முறைகளுக்கு விரோத மான செயலாகும் என யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி தெரிவித்துள்ளார். இக்கருத்தைக் கேட்டுக் குழப்பமடைந்து விட வேண்டாம் எனவும் அவர் மக்களிடம் வேண்டு கோள் விடுத்தார் (32,27)

### தமிழ்...

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் தலைமை வேட்பாளர் இரா.சம்பந்தன் மற்றும் வேட்பாளர்களான க.துரைரட்ணசிங்கம்,எஸ்.கெளரிமுகுந்தன், சதா, சண்முகநாதன், சாகுல்ஹமீது ஆகியோர் வாகனம் ஒன்றில் எழுச்சிப்பேரணியில் வந்தனர். நாயன்மார் திடல் சந்தியில் நிறுவப்பட்டுள்ள கரும்புலி சுபாஷின் நினைவுத்தூபிக்கு தலைமை வேட்பாளர் சம்பந்தனும் ஏனைய வேட்பாளர்களும் மலரஞ்சலி செலுத்தினர். விடுதலைப்புலிகள் தம்பலகாமம் அரசியல் துறைப்பொறுப்பாளர் திருமலையும் இந்த நிகழ்வில் பங்குபற்றினர். பின்னர் கூட்டமைப்பு தேர்தல்பிரச்சாரக் கூட்டத்தில் தலைமைவேட்பாளர் இரா.சம்பந்தன், வேட்பாளர்கள், க.துரைரட்ணசிங்கம், சதா, சண்முகநாதன், சாகுல் ஹமீது, எஸ்.கெளரிமுகுந்தன் திருகோணமலை மாவட்ட வர்த்தக சம்மேளனத் தலைவர் கே.துரைராஜா ஆகியோர் உரைநிகழ்த்தினர். (25)

## சாவு அறிவித்தல்

### சொக்கலிங்கம் பாலச்சந்திரன்
**(கிராமசேவையாளர் J/19 சிறாம்பியடி யாழ். வீதி -யாழ்ப்பாணம்).**

நெடுந்தீவு கிழக்கைச்சேர்ந்த சொக்கலிங்கம் பாலச்சந்திரன் அவர்கள் நேற்றுமுன்தினம் (28.03.2004) அகாலமரணமானார் அன்னார் சொக்கலிங்கம் -கண்மணி ஆகியோரின் அன்பு மகனும் சின்னத்துரை (ஆசிரியர்) - வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மருமகனும் இராஜராஜேஸ்வரியின் அன்புக்கணவரும் பிரசன்னா, காலஞ்சென்ற பிரசாத் மற்றும் பிரதாப், பிரதீப், சோபிகா அகியோரின்அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.31காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.
T.P- 0777777881,0777570232

தகவல் -
மனைவி,
பிள்ளைகள். (சி-9343)

## சாவு அறிவித்தல்



### செல்லையா பத்மநாதன்

கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் உடையார்கட்டை நிரந்தர வசிப்பிடமாகவும்கொண்ட பத்மநாதன் (முன்னாள் புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கத் தலைவர்) 28.03.2004 அன்று அகால மரணமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லையா இராசம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, நாகம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும், ராகுலன் (ஆசிரியர் உடையார்கட்டு ம.வி.)சகீலன் (லண்டன்) சகிக்கா (பல்கலைக் கழகவளாகம் வவுனியா) ஆகியோரின் அன்புத்தந்தையும், செல்லாச்சி, கார்த்தலிங்கம், சண்முகானந்தம், வாரித்தம்பி புஸ்பராணி, அருளம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராசாத்தி, யோகேந்திரன் (கொலண்ட்)காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், பாக்கியரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.03.2004 இன்று 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உடையார்கட்டு தெற்கு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(4409)

தகவல்:-
மகன்
ராகுலன்

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.